## DEPOSITION OF WITNESS

## THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT & SESSIONS COURT

## MADURAI

**M.C.O.P. NO. 2141/2019 P.W.2**

Deposition of Witness for the Petitioner / Respondents Solemnly affirmed by of this Court on **17.03.2021** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | |
|---|---|
| Name: S.சரவணன் | Father's Name: |
| Village: | Taluk : |
| Caste: | Religion: |
| Calling: | Age: |

**மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சி முதல் விசாரணை**

நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். நான் மதுரை வடமலையான் மருத்தவமனையில் மருத்துவ ஆவண காப்பாளராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். வேல்முருகன் என்பவர் சாலை விபத்தின் காரணமாக கடந்த 02.08.2019 முதல் 27.08.2019 வரை உள் நோயாளியாக சிகிச்சை எடுத்த சிகிச்சை கோப்பு அசல் ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அது மசாஆ 22 ஆகும். மேற்படி வேல்முருகன் சிகிச்சைக்கு செலுத்தப்பட்ட மருத்துவ பில்கள் ரூ.12, 84, 496/- ஆகும். மருத்துவமனையிலிருந்து concession கொடுத்த தொகை ரூ.3,84,496/-ஆகும். ஸ்டார் இன்சூரன்ஸ் நிறுவத்தில் இருந்து ரூ.2,00,000/- கிடைக்கப்பெற்றது. பாக்கி தொகை ரூபாய் 7 லட்சத்தை வேல்முருகனுக்காக அவரது உறவினர்கள் செலுத்தியுள்ளனர். மேற்படி மருத்துவ பில்கள் மசாஆ 23 ஆகும். சிகிச்சை பலனின்றி வேல்முருகன் இறந்துவிட்டார்.

1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை

மசாஆ 23 ல் star health என்ற நிறுவத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை. மசாஆ 23 ஆன மருத்துவ பில்லுக்கான மொத்த தொகையும் star health என்ற நிறுவத்திற்கு தான் அனுப்பப்பட்டது. star health நிறுவத்திலிருந்து எவ்வளவு தொகை பெறப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நான் தனியாக கொண்டுவரவில்லை. நோயாளி சார்பில் பணம் செலுத்தப்படும் போது அச்சிடப்பட்ட ரசீது வழங்கப்படும் என்றால் சரிதான். மசாஆ 15 நகல் ஆவணமாகும். அதன் அசல் star health என்ற நிறுவத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மசாஆ 15 ல் நோயாளி சார்பில் பணம் செலுத்தப்பட்டதாக குறிப்பு எதுவும் இல்லை. மசாஆ 23 ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை யாரால் செலுத்தப்பட்டது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. தற்சமயம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை வைத்தும் மசாஆ 15 யை வைத்தும் பில் தொகை முழுவதுமாக star health என்ற நிறுவனம் தான் செலுத்தியது என்று சொன்னால் என்னால் மறுக்க முடியாது.